செ.வெ.எண்.379/2017 நாள்: 04.08.2017

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா முன்னிட்டு சிறப்பு மருத்துவ மற்றும் இரத்ததான முகாம்கள்**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் தகவல்**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா வரும் 30.08.2017 அன்று நடைபெறவுள்ளது. அதனையொட்டி பல்வேறு துறைகள் சார்பில் கலை இலக்கிய, விளையாட்டு போட்டிகளும், பேரணிகளும், ரத்ததான முகாம்கள் என பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட உள்ளது. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, பொது சுகாதார மற்றும் நோய் தடுப்புத்துறை சார்பில் சிறப்பு மருத்துவமுகாம் மற்றும் இரத்ததான முகாம் நடத்தப்பட உள்ளது.

இம்மருத்துவ மற்றும் இரத்ததான முகாம்கள் காஞ்சிபுரம் சுகாதார மாவட்டத்தில் 05.08.2017 அன்று திருட்புட்குழி, படப்பையிலும், 11.08.2017 அன்று ஒரத்தியிலும், 18.08.2017 அன்று ஜமீன் எண்டத்தூரிலும், 19.08.2017 அன்று பரந்தூர், பன்ருட்டி, சாலவாக்கத்திலும் நடைபெறுகிறது. செங்கல்பட்டு சுகாதார மாவட்டத்தில் 10.08.2017 அன்று இடைகழிநாட்டிலும், 11.08.2017 அன்று பவுஞ்சூரிலும், 17.08.2017 அன்று செம்பாக்கத்திலும், 18.08.2017 அன்று பதுவஞ்சேரி, வள்ளிபுரத்திலும், 19.08.2017 அன்று நந்திவரத்திலும் நடைபெறுகிறது.

இரத்ததான முகாம் மட்டும் 07.08.2017 அன்று குன்றத்தூர், ஸ்ரீ முத்து குமரன் பொறியியல் கல்லூரி மற்றும் அச்சரப்பாக்கத்திலும், 08.08.2017 அன்று செனம்பாக்கம், தனலட்சுமி பொறியியல் கல்லூரியிலும், 10.08.2017 அன்று நந்திவரத்திலும், 11.08.2017 அன்று திருப்புக்குழி, நரசிம்மபல்லவன் பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் சட்ராஸ், டான் போஸ்கோ பொறியியல் கல்லூரியிலும், 12.08.2017 அய்யன்பேட்டை, ஆதி கல்லூரியிலும்,14.08.2017சூனாம்பேடு, சூனாம்போடு கிராமத்திலும், 16.08.2017 மொளச்சூர், சாம்சங் கம்பெனியிலும், 17.08.2017 ஞானகிரிஸ்வரன்பேட்டை, அக்ஷயா பொறியில் கல்லூரியிலும், 18.08.2017 அன்று உத்திரமேரூர், மீனாட்சி அம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பதுவன்சேரி, நியூ பிரின்ஸ் பாவானி பொறியியல் கல்லூரி மற்றும் கூவத்தூர், மார்க் கல்லூரியிலும் நடைபெறகிறது.

இம்முகாம்களில் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்படுத்திக் கொண்டு, சிறப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

செய்தி வெளியிடுபவர்

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**காஞ்சிபுரம்**